இஸ்லாத்தில் இமாம் என்பவர் கிறிஸ்துவ மதத்தில் பாதிரியைப் போன்றவரா?

இமாம் என்ற வார்த்தையின் அர்த்தம், மக்களுக்கு தொழுகை வழிபாட்டை முன்னின்று நடத்துபர் அல்லது அவர்களின் விவகாரங்களில் தலைமை தாங்கி வழி நடத்துபவரையும் குறிக்கும் ஒரு சொல்லாகும். இது குறிப்பிட்ட நபர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட, அல்லது மட்டுப்படுத்தப்பட்ட மத அந்தஸ்த்து -தகுதி- கிடையாது. மார்க்கம் அனைவருக்குமானது என்ற வகையில் இஸ்லாத்தில் வர்க்கமோ அல்லது புரோகிதமோ (சமயகுருப்பதவியோ) இல்லை. குறிப்பு : பொதுவாக இது பள்ளிவாசலில் வழிபாடு நேரத்தில் வழிபாட்டை தலைமை ஏற்று நடத்துபவரையும் நாட்டுத் தலைமையையும் குறிக்கும் ஒரு சொல்லாகும். மேலும் இமாம் என்பவர் தொழுகையை நடத்துபவர் மட்டுமல்லாமல் மதத் தலைவராகவும், மதம் தொடர்பான விடயங்களை ஆளமாக கற்று மக்களுக்கு அவற்றை கற்றுக்கொடுப்பவராகவும் இருப்பார். இஸ்லாத்தில் மனிதர்கள் யாவரும் அல்லாஹ்வின் முன் சீப்பின் பற்களைப்போல் சமமானவர்கள். ஆகையால் இறையச்சம் நற்செயல் ஆகியவைகளின் மூலமேயன்றி, அரபி,அரபி அல்லாதவர் என்ற வேறுபாடுகிடையாது. மக்களுக்கு தொழுகை நடாத்துவதற்கு மிகவும் தகுதியானவர் அல்குர்ஆனில் பெரும் பகுதியை மனனம் செய்தவரும், தொழுகை வழிபாட்டுடன் தொடர்பான சட்டதிட்டங்களில் கட்டாயம் அறிந்திருக்க வேண்டியவற்றை கற்றறிந்தவருமாவார். முஸ்லிம்களிடத்தில் ஒரு இமாம் எவ்வளவு மதிப்புக்குரியவராக இருந்தாலும் பாதிரியாரைப் போன்று அவரால் பாவ ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்கவோ பாவங்களை மன்னிக்கவோ முடியாது.

"இவர்கள் அல்லாஹ்வைத் தவிர்த்து தங்கள் பாதிரிகளையும், சந்நியாசிகளையும், மர்யமுடைய மகன் மஸீஹையும், (தங்கள்) கடவுள்களாக எடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், வணக்கத்திற்குரிய ஒரே ஓர் இறைவனைத் தவிர மற்றெவரையும் வணங்கக் கூடாதென்றே இவர்கள் அனைவரும் ஏவப்பட்டு இருக்கின்றனர். வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர (வேறெவனும்) இல்லை. அவர்கள் இணைவைக்கும் இவற்றைவிட்டு அவன் மிகவும் பரிசுத்தமானவன்". (அத்தவ்பா : 31). تقدم

நபிமார்கள் தங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து எத்திவைக்கப்பட்ட விடயங்களில் தவறுசெய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என இஸ்லாம் வலியுறுத்துவதுடன், மதப்புனிதருக்கோ அல்லது பாதிரிக்கோ இறைவெளிப்பாடு –வஹ்யு- மற்றும் தவறுகளிருந்து பாதுகாப்பு என்ற நிலை கிடையாது என்றும் குறிப்பிடுகிறது. உதவிதேடுதல், கோரிக்கை ஒன்றை முன்வைத்தல் போன்ற விடயங்களில், குறித்த வேண்டுதல் நபிமார்களிடத்திலாயினும் அல்லாஹ் அல்லாதோரை நாடுதல் இஸ்லாத்தில் முற்றாக தடை செய்யப்பட்ட விடயமாகும்.

ஏனெனில் தன்னிடம் இல்லாத ஒன்றை எவருக்கும் கொடுக்கமுடியாது அல்லவா!. தனக்கே உதவிக்கொள்ள இயலாத நிலையில், ஒரு மனிதன் பிறரிடம் உதவியை தனக்கென எவ்வாறு கோர முடியும்? இறைவனிடம் உதவி கோரல் உயர்வாகும். அவன் அல்லாதோரிடத்தில் உதவி கோருவது இழிவாகும். ஒரு வேண்டுதலை அரசனிடத்தில் முன்வைப்பதும், சாமான்ய மக்களிடத்தில் முன்வைப்பதும் சமமானது என்பது பகுத்தறிவுக்குட்பட்ட ஒரு விடயமாகுமா? ஆக இந்த கருத்தை பகுத்தறிவும் தர்கவியலும் முற்றாக நிராகரிக்குமல்லவா!? அல்லாஹ்வி (கடவுளி) ன் இருப்பை விசுவாசித்து அவன் அனைத்து விடயங்களிலும் வல்லமை படைத்தவன் என்ற கோட்பாட்டின் அவன் அல்லாதோரிடம் வேண்டுதலை முன்வைப்பது ஒரு வகை சிறுமைத்தனமாகும். இது இஸ்லாத்திற்கு முரணான இணைவைத்தல் எனும் மிகப்பெரும் குற்றமாகும்.

அல்லாஹ் தனது தூதரின் வார்த்தையின் மூலம் இவ்வாறு பிரஸ்தாபிக்கிறான் :

"(மேலும், நபியே) நீர் கூறுவீராக: “அல்லாஹ் நாடினாலே தவிர நான் எனக்கு ஒரு நன்மையையோ தீமையையோ செய்து கொள்ள சக்தி பெறமாட்டேன். நான் மறைவானவற்றை நான் அறிந்தவனாக இருந்திருந்தால், நன்மைகளையே அதிகமாகத் தேடிக் கொண்டிருப்பேன், தீமை என்னைத் தொட்டிருக்காது, நான் விசுவாசங்கொண்ட சமுதாயத்தினருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயங் கூறுபவனுமேயன்றி வேறில்லை".(அல்அஃராப் : 188). تقدم

"நான் உங்களைப் போன்ற மனிதன்தான், (உண்மையாகவே) வணங்கப்படத்தகுதியான உங்கள் இரட்சகன் ஒருவனே என்று எனக்கு வஹி அறிவிக்கப்படுகிறது. என நபியே கூறுவீராக. எவர் தனது இரட்சகனை சந்திப்பதை ஆதரவு வைக்கிறாரோ அவர் நல்லறம் செய்யட்டும், மேலும் தனது இரட்சகனின் வணக்கத்தில் எவரையும் இணையாக்காதிருக்கட்டும்". (கஹ்ஃப் : 110). تقدم

"நிச்சயமாக பள்ளிவாசல் (மஸ்ஜிது) களெல்லாம், அல்லாஹ்வை வணங்குவதற்காக உள்ளன. ஆகவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும் (பெயர் கூறி) அழைக்காதீர்கள்". (ஜின் : 18). تقدم

இஸ்லாம் குறித்த கேள்வி பதில்
Source: https://mawthuq.net/demo/qa/ta/show/66/
Arabic Source: https://mawthuq.net/demo/qa/ar/show/66/
Sunday 1st of November 2026 06:40:55 AM